6. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2017) மற்றும் 2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2017) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)